# யாழ் - குடாநாட்டில் மீன்பிடித்தடைகளும் மீனவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்

கலாநிதி. ஏ. எஸ். சூசை,

கடந்த பதினைந்து வருடங்களுக்கும் மேலாக இலங்கையின் வடக்குக் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டு வருகின்ற பல்வேறு தடை நடவடிக்கைகளின் விளைவாக இப்பிரதேசத்தின் கடல் வளத்துறையானது. மோசமாகப் பாதிக்கப்பட்டு மிகவும் நலிவடைந்த நிலையில் காணப்படுகின்றது. குறிப்பாக, இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மீன்பிடிப் பிரதேசங்களில் இத்துறையில் தங்கி வாழ்கின்ற கிட்டதட்ட ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் மீனவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதுடன் இவர்களில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமானோர் மாற்றுத் தொழில் ஏதுமின்றி அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளவர்களாகவும் அரைகுறை நிவாரணத்தை நம்பி வாழ்வோராகவும் காணப்படுகின்றனர். வேறு வழியின்றிகரையோரங்களில் இன்று மீன்பிடியில் ஈடுபடுவோர் சுதந்திரமாக தமது தொழில் நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்ல முடியாதவர்களாகவும் உயிரைப்பணயம் வைத்துத் தமது தொழில் முயற்சிகளை மேற்கொள் வோராகவும் காணப்படுகின்றனர்.

இந்தப் பின்னணியில் வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடா நாட்டில் இலங்கை அரசு மேற்கொண்டுள்ள மீன்பிடித்தொழில் தொடர்பான பல்வேறு தடைகள், கட்டுப்பாடுகள், மீன்பிடித்துறையில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதையும், இத்துறையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபடுவோர் மற்றும் இவர்களில் தங்கி வாழ்வோர் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் நோக்குடனும் இப்பகுதியில் பல்வேறு பகுதிகளுக்கும் நேரடியாகச்சென்று அவதானித்ததுடன், மீனவர்கள் பலரையும் செவ்விகண்டு மற்றும் மீன்பிடித் திணைக் களத்திலிருந்து பெறப்பட்ட தகவல்கள் அடிப்படையிலும் இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

## யாழ் குடாநாட்டின் கடல்வள வாய்ப்புக்கள்.

யாழ் குடாநாடு அதன் அமைவிடம், அமைப்புக் காரணமாக இலங்கையின் ஏனைய பிரதேசங்களைவிட மீன்பிடித் தொழிலுக்கு வாய்ப்பான சமுத்திரச் சூழலைக் கொண்டதாக விளங்குகின்றது. யாழ் வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்குக் கரையோரங்கள், கரையோர தூரக்கரை, ஆழ்கடல் மீன்பிடிப்புக்கும், யாழ் தெற்குப்பகுதியானது ஏரிப்பகுதி மீன்பிடித்தொழில் செய்யக் கூடிய வாய்ப்பினையும் கொண்டதாகவும் உள்ளது. இதனால் இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியில் 25 சதவீத பங்கினை இப்பிரதேசம் 1983ம் ஆண்டுவரை வழங்கிவந்துள்ளது. அத்துடன் அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தருகின்ற இறால், கடலட்டை, சங்கு, நண்டு கணவாய், போன்ற கடலுணவு வகைகளை உற்பத்தி செய்யும் களஞ்சியமாகவும் விளங்கிவந்துள்ளது. யாழ் மாவட்டக் கடற்றொழிலாளர் விரிவாக்க அலுவலர் பிரிவில் 14 மீன்பிடி பரிசோதகர் பிரிவுகள் உள்ளன. இங்கு ஏறக்குறைய 107 மீன்பிடிக் கிராமங்கள் காணப்படுகின்றன. 1989ஆம் ஆண்டு கணிப்பீட்டின் பிரகாரம் 22568 மீனவக் குடும்பங்களும், 102808 மொத்த மீனவர்களும் காணப்பட்டனர். நேரடியாக மீன்பிடியில் ஈடுபடுவோர் தொகை 26009 பேராகும். 1983ஆம் ஆண்டுவரை மீன் உற்பத்தியில் முதலிடத்தைப் பெற்றுவந்த இப்பகுதி அக்காலப் பகுதியில் ஏற்பட்ட இனக்கலவரத்தினாலும், அரசு மேற்கொண்ட பல்வேறு மீன்பிடித் தடைகள் காரணமாகவும், இராணுவம் மேற்கொண்ட பல அட்டூழியங்களினாலும் இத்துறை பெரும் பாதிப்படைந்து நலிவடைந்து போயிற்று.

அட்டவணை இல.1

## மீன்பிடிக்கான நீரியல் வளங்கள்

| மா.க.வி. அலுவலர் பிரிவு | கரையோர நீளம் (கி.மீ) | உவர்நீர் நிலைகள் (ஹெக்) | நன்னீர்நிலைகள் (ஹெக்) | சதுப்புநிலத்தாவரம் (ஹெக்) |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 392.6 | 45525 | 6711 | 2276 |
| கிளிநொச்சி | | 11917 | | 7070 |

மூலம்:- Sri Lanka Fisheries Year Book, 1997.

### மீன்பிடி தொடர்பான தடைகள்:

மீன்பிடித்தொழில் தொடர்பாக 1983களைத் தொடர்ந்து அரசு மேற்கொண்ட பல்வேறு தடைகள் பின்வருமாறு அமைகின்றது.

1. கடலில் பாதுகாப்பு வலயமும், கடல்வலயத் தடையும்
2. இராணுவ முகாம் விஸ்தரிப்பும் - இராணுவக் காவலரண்களும்
3. நேரமும் - தூரமும் கட்டுப்பாடு
4. உபகரணங்கள் - மற்றும் இயந்திரப்பாவனைத் தடைகள்
5. போக்குவரத்து - சந்தைப்படுத்தல் தடைகள்
6. 'பாஸ்' நடைமுறைகளும் - அன்றாட கெடுபிடிகளும்.

### கடலில் பாதுகாப்பு வலயம்:

பாதுகாப்பு என்ற போர்வையில் வடபகுதியில் கடலில் முதன் முதலில் பாதுகாப்பு காவல் வலயம் ஒன்று 18-11-1985 அன்று பிரகடனப்படுத்தப்பட்டது. இது பின்வருமாறு அமைந்திருந்தது. "தலைமன்னாரிலிருந்து மேற்கே ஐந்து மைல் தூரத்திலுள்ள ஒரு புள்ளிக்கு நேராக நெடுந்தீவின் வடகிழக்கு. வடக்குக் கரையோரத்திற்கும், மேற்குக் கரையோரத்திற்கும் நெடுகே அளக்கப்படுவதும் கரையிலிருந்து ஐந்து மைல் தூரத்திற்கு சுண்டிக்குளத்திலிருந்து யாழ்ப்பாண வடகரையோரமாக தலைமன்னார் வரை நீடித்திருப்பதும் ஆகும். "இந்த கரையிலிருந்து ஐந்து மைல்களுக்கப்பால் இலங்கை- இந்திய ஆள்புல எல்லைக்குட்பட்ட பகுதியே காவல் வலயமாகவும் இங்கு மீன்பிடித்தொழில் உட்பட சகல நடவடிக்கைகளும் தடைசெய்யப்பட்டன. இதன் விளைவாக இப்பகுதியினுள் நடைபெற்றுவந்த இழுவை வலை, கில்வலை மீன்பிடிமுறைகள் முற்றாகத் தடைப்பட்டன. இந்த நடைமுறையானது. 1987இல் இந்திய இராணுவம் இலங்கைக்கு வரும்வரையில் இருந்தது. இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து 1990 இல் திரும்பிச்செல்லும் காலம் வரையிலும் வடபகுதிக் கடலில் மீன்பிடித்தொழில் குறிப்பிடத்தக்க அளவில் நடைபெற்றுவந்தன. பின்னர் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பித்ததும் சிறிலங்கா அரசினால் வடபகுதி முழுவதும் உள்ள கடல் பிராந்தியம் தடைசெய்யப்பட்ட வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. இதன் விளைவாக சகல மீன்பிடி முறைகளும் பாதிப்புக்குள்ளாகின. மூன்றாவது ஈழப்போர் ஆரம்பித்து 1995இன் பிற்பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டை சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமிக்கும் வரை கடல்வலயத்தடை அமுலில் இருந்தது. பின்னர் இராணுவம் வடபகுதிக் கரையோரம் முழுவதும் இராணுவ வேலிகளையும், காவலரண்களையும் ஏற்படுத்தியதுடன் சில குறிப்பிட்ட கரையோரங்களில் மக்களை மீளக்குடியேற அனுமதிக்கவில்லை. இங்கு வழமை நிலை திரும்பிவிட்டது என்பதை வெளியுலகிற்குக் காட்ட வரையறுக்கப்பட்ட பிரதேசங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கரையிலிருந்து சில மீற்றர் தூரம் வரை சிற்றளவிலான மீன்பிடியில் ஈடுபட மீனவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இதற்கென பாதுகாப்பு அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்ட கடல் மீன்பிடி அனுமதி பெற்ற வலயம் பின்வருமாறு அமைந்திருந்தது.

| | |
|---|---|
| யாழ் - ஏரிப்பகுதி | - மீன்பிடிக்க இரவுநேரம் தடைசெய்யப்பட்டது. பகலில் மட்டும் அனுமதி. அதிகாலை 4.00 மணிமுதல் பி.பகல் 3.00 மணிவரை. எல்லையானது, கரையிலிருந்து 500 மீற்றர் தூரம் வரை. (பாசையூருக்கு அப்பால் தடைசெய்யப்பட்டுள்ளது) |
| யாழ் - தீவகப் பகுதிகள் | - இடுப்பளவு நீரில் வீச்சுவலை மட்டும் வீசுதல் பகலில் மட்டும் அனுமதி |
| நெடுந்தீவு | - தீவைச் சூழ்ந்து 1 மைல் தூரம் வரை மீன் பிடிக்கலாம். |
| மாதகல் தொடக்கம் பருத்தித்துறை வரை. | - பலாலி விமானத்தள ஓடுபாதையைப் பாதுகாக்கும் நோக்குடன் இக்கரையோரம் மீன்பிடிக்க முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் தொண்டைமானாறு- பருத்தித்துறை வரை 500 மீற்றர் தொடக்கம் 1 கி.மீ. தூரம் வரை அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| பருத்தித்துறை - தாளையடி | - இப்பகுதியிலும் கரையிலிருந்து 500 மீற்றர் முதல் 1. கி.மீ. வரை மீன்பிடிக்க அனுமதி. |

இவ்வடிப்படையில் தூரக்கரை, ஆழ்கடல் மீன்பிடி முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மன்னார் | - தீவுப்பகுதியில் பகலில் மட்டும் மீன்பிடிக்க அனுமதி, பெருநிலப்பகுதி கரையோரம் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. |
| முல்லைத்தீவு, கிளிநொச்சி | - முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ள பகுதி. |

## நேரக்கட்டுப்பாடு:

யாழ் குடாநாட்டின் சூழவரையுள்ள கரையோரங்களில் மீன்பிடித்தொழில் நடைபெற்றுவருகின்றபோதிலும் உற்பத்தி யிலீடுபடும் நேரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக ஏரிப்பகுதியிலும், தீவகப்பகுதியிலும், அதிகாலை 4.00மணி முதல் பி.ப 3.00 மணிவரையும் வடமராட்சி வடக்கு, கிழக்குக் கரையோரங்களில் அதிகாலை 2.00 மணிமுதல் அதிகாலை 6.00 மணிக்கு இடையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏரிப்பகுதியில் இரவுநேரம் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. மன்னாரில் தீவுப்பகுதி மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மன்னார் பெருநிலப்பரப்பு பிரதேசப் பகுதி முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. (தெற்கே வங்காலை முதல் - முள்ளிக்குளம் வரை, வடக்கே தள்ளாடி முதல் வெள்ளங்குளம் வரை)

## இராணுவ முகாம் விஸ்தரிப்பும் தொடர் காவலரண்களும்

ஆரம்பக்காலங்களில் யாழ் குடாநாட்டில் கரையோரப் பிரதேசங்களில் ஆனைபிறவு, பலாலி, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் மட்டுமே இராணுவ முகாம்கள் அமைந்திருந்தன. 1983களைத் தொடர்ந்து ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக யாழ் குடாநாட்டு கரையோரப் பிரதேசங்கள் தோறும் இராணுவ முகாம்களும், இராணுவ காவலரண்களும் தொடர்ச்சியாக இடம் பெறலாயின. குறிப்பாக 1995 இன் பின்னர் யாழ் குடாநாடு பூரண இராணுவ மயமாக்கப்பட்ட பின்னர் முழுக் கரையோரப் பிரதேசமும் இராணுவ முகாம்களும் இராணுவத் தொடர் காவலரண்களும் விஸ்தரிக்கப்பட்டுவிட்டன. இதன் விளைவாக மாதகல் முதல் தொண்டை மானாறு வரையிலான வலிகாமம் வடக்குக் கரையோரப் பிரதேசமும், ஆனைபிறவுக்கு கிழக்கு -மேற்கு ஏரிக்கரையோரப் பகுதிகளும் வடமராட்சி

கிழக்கில் வெற்றிலைக்கேணி முதல் சுண்டிக்குளம் வரையிலான கரையோரப்பகுதிகள் யாவும் மீன்பிடித்தொழில் முற்றாகத் தடைசெய்யப்பட்டு விட்டன. இதனால் இப்பகுதிகளில் உள்ள மீன்பிடிக்குடியிருப்புக்கள் யாவும் வெறிச்சோடிக் கிடக்கின்றன. இப்பகுதிகளில் இன்று எவ்வித மீன்பிடித்தொழில் வாய்ப்புக்களும் இல்லை. இவை தவிர்ந்த ஏனைய கரையோரப் பிரதேசங்களில் ஆங்காங்கே சிதறலாக மீன்பிடிக் குடியிருப்புக்களில் மிகக்குறைவான எண்ணிக்கையுடைய மீனவர்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுவருவதை அவதானிக்கமுடிகிறது. இவ்வருட நடுப்பகுதியில் கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளிலிருந்தும் மக்கள் முற்றாக வெளியேறியுள்ளனர். இதனால் அப்பகுதிகளில் மீன்பிடி முற்றாக நடைபெறுவதில்லை.

## மீன்பிடி உபகரணங்களுக்கான தடை:

யாழ் குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் மீன்பிடித்தொழிலில் அரசு விதித்துள்ள தடைகளுள் மீன்பிடி உபகரணங்கள் பாவனைத் தடையும் ஒன்று. குறிப்பாக உள்இணை, வெளியிணை இயந்திரங்களும், இயந்திரப் படகுகளும் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கண்ணாடி நாரிழையினாலான படகுகளுக்கான இரசாயனப் பொருட்களும் இயந்திர உதிரிப்பாகங்களும் கொண்டுவரவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மீன்பிடிக்குத் தேவையான வலைகள் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விநியோகிக்க அனுமதிக்கப்பட்டுள்ளபோதிலும் தேவையான வலைகள், கயிறுகள், நூல்கள் போன்றன உரிய வேளைகளில் கொழும்பிலிருந்து இங்கு கொண்டுவருவது போக்குவரத்துச் சீர்கேடுகளினால் தடைப்பட்டும் உள்ளது. கட்டுமரங்கள், வள்ளங்கள் மட்டும் கைகளினால் வலித்துச் செல்ல மட்டும் அனுமதி உண்டு. பாய்மரங்கள் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மன்னாரில் 9. (HP) குதிரைவலுக் கொண்ட வெளியிணை இயந்திரப்படகும் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

## போக்குவரத்துத் தடையும் சந்தைப் படுத்தல் தடையும்

யாழ் - குடாநாட்டிலிருந்து பிரதான நிலப்பகுதிக்கான போக்குவரத்துப்பாதை பலவருடங்களாகத் தடைப்பட்டுள்ளது. பயணங்கள் யாவும் விமானமூலமும், கப்பல்கள் மூலமும் சீரற்ற முறையிலேயே நடைபெற்றுவருகின்றது. போக்குவரத்துச் செய்வதற்காக "பாஸ்" அனுமதி நடைமுறைகள் சொல்லமுடியாத அளவிற்கு சீரழிந்துள்ளது. இந்நிலையில் மீன்பிடி உபகரணங்களை வெளியிருந்து இப்பகுதிக்குக் கொண்டுவருவதும், இங்குள்ள கடலக ஏற்றுமதி களான இறால், கடலட்டை, சங்கு மற்றும் மீன்பொருட்களை உரிய நேரத்தில் வெளியிடங்களுக்குக் கொண்டுசெல்வதென்பதும் நடைமுறையில் சாத்தியமற்ற ஒன்றாகவே இதுவரை உள்ளது. இதனால் உற்பத்தி செய்யப்படும் பெறுமதி மிக்க கடலுணவுகள் இங்கு தேங்கி வீணாக அழியும் நிலை காணப்படுகின்றது. பதனிடல் வசதிகளோ அல்லது கடலுணவுகளைச் சந்தைப் படுத்துவதற்கான வசதிகளோ இதுவரையில் எவராலும் ஏற்படுத்திக்கொடுக்கப் படவில்லை. இங்கு பல்வேறு அரசு சாராத நிறுவனங்களும் தொண்டர் நிறுவனங்களும் இருந்தபோதிலும் மீன் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துக்கான வாய்ப்புக்கள் எதுவும் இவர்களால் முன்னெடுக்கப்படவில்லை. என்பதும் குறிப்பிடத்தக்கது.

## "பாஸ்" நடைமுறைகளும் அன்றாட தொழிற்கட்டுப்பாடுகளும்:

மீனவர்கள் கடலுக்குச் செல்வேண்டுமாயின் அவர்களுக்கெனத் தனியான "பாஸ்" நடைமுறைகள் அமுலில் உள்ளன. இவர்களுக்கெனத் தனியான ஆள் அடையாள அட்டைகள் அவ்வப் பகுதிக்கும் பொறுப்பாகவுள்ள இராணுவ அதிகாரிகள் மூலம் வழங்கப்படுகின்றன. இவ் அடையாள அட்டைகள் அடிக்கடி மாற்றப்படுகின்றன. உதாரணமாக குருநகர் பகுதியில் இதுவரை ஏழாவது தடவையாக புது அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. பொறுப்பதிகாரிகள் மாற்றப்படும்போது இவ் அடையான அட்டைகளும் மாற்றப்படுகின்றன. அத்துடன் வெவ்வேறு வகை மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவோருக்கு வெவ்வேறு நிறங்களில் அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

வள்ளங்களில் பாய்மரங்கள் கட்டிச்செல்ல ஏரிப்பகுதிகளில் தடை விதிக்கப்பட்டுள்ளது. 1999 மே மாதத்தில் இத்தடை நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டபோதிலும் நடைமுறையில் இது இல்லை. அத்துடன் சாரத்துடன் மீன்பிடிக்கச்

செல்லவும் ஒரு கட்டத்தில் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. ஆனால் நீளக்காற்சட்டையுடன் இறால் பிடிக்க சிறுத்தீவுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் 1999 ஆகஸ்டில் சுட்டுக் கொல்லப்பட்டனர். பாய்களையோ அல்லது சாரத்தையோ பாயாகப் பயன்படுத்தி இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு மீனவர்கள் சென்று திரும்புவதாலேயே பாய்கள் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதனால் மீனவர்கள் நீண்ட தூரத்திற்கு கூடியநேரம் உடல் வலுவைப் பயன்படுத்தி கோல்கள் அல்லது தண்டுகளின் உதவியுடன் படகினை வலித்துச் செல்லவேண்டிய கஷ்டமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மனச்சோர்வுடன் செல்லும் மீனவர் உடற்சோர்வையும் அனுபவிக்க வேண்டியுள்ளது.

கடலுக்குச் செல்லும் மீனவர்கள் இராணுவம் குறித்துள்ள குறிப்பிட்ட நுழை வாயினுடாகவே கடலுக்குள் நுழைதல் வேண்டும். இதனால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் அவ்விடத்தில் ஒன்றுகூடி அடையாள அட்டைகள் பரிசீலனையின் பின்னர் ஒவ்வொருவராக அனுமதிக்கப்படுகின்றனர். எல்லைகளைத் தாண்டினாலோ குறிப்பிட்ட நேரத்திற்குச் சற்றுப் பிந்தி கரை திரும்பினாலோ கடுமையாகத் தண்டிக்கப்படுகின்றனர். உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டுவதுடன் அவர்கள் தொழிலுக்குச் செல்வதும் தடுக்கப்படுகின்றது. மொத்தத்தில் மீனவர்கள் அடிமைகள் போலவே நடத்தப்படுகின்றனர்.

### மீன்பிடித் தடைகளின் விளைவுகள்

கடலில் ஏற்படுத்தப்பட்டுள்ள காவல் வலய எல்லைகளும், இதன் தூரமும் மீன்பிடியில் ஈடுபடுகின்ற நேரமும் கட்டுப்படுத்தப் பட்டுள்ளமையினால் இயல்பான மீன்பிடி முறைகளில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. முக்கியமாக தூரக்கரை ஆழ்கடலில் பயன்படுத்தப்பட்டுவந்த கில்வலை மீன்பிடி முறைகளும், இழுவைவலை மீன்பிடிமுறைகளும், சுழியோடி மீன்பிடித்தல் முறைகளும் முற்றாகச் செயலிழந்துவிட்டன. உள் இணை வெளியிணை இயந்திரப்படகுகள் பாவனை தடுக்கப்பட்டமையும், இத்தகைய பிரசித்திபெற்ற மீன்பிடிமுறைகள் தடைபடக்காரணமாகியது. இத்தடையின் விளைவாக 1983 காலப்பகுதிகளில் பயன்படுத்தப்பட்டுவந்த $3^{1}/_{2}$ தொன் நிறையுடைய 569உள் இணை இயந்திரப்படகுகளில் ஆக 27 மட்டும் எஞ்சியுள்ளதாகவும் இதுவும் இன்று பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும், $17^{1}/_{2}$ அடி நீளமான 1852வெளியிணை இயந்திரப் படகுகளில் ஆக 90 மட்டும் எஞ்சியுள்ளதாகவும் இதுவும் பயன்படுத்த முடியாது கரையில் இழுத்துவைக்கப் பட்டுள்ளதாகவும் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இத்துடன் 3813 கட்டுமரங்களில் இன்று ஆக 1119 கட்டுமரங்களும் 1545 வள்ளங்களில் 1096 வள்ளங்களும் பயன்படுத்தப்படுவதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன. பெரும்பாலான படகுகள் அழிக்கப்பட்டும், எஞ்சியவை விறகுக்காகவும் பயன்படுத்தப்பட்டுவிட்டன.

1983இன் பின்னர் இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக 705 மில். ரூபா பெறுமதியான உள்இணை இயந்திரப்படகுகளும், 408.72 மில். ரூபா பெறமதியுடைய வள்ளங்கள், கட்டுமரங்கள் என்பனவும் 27.5மில். ரூபா பெறுமதியான வலைகளும் சேதமடைந்ததாகவும் இவற்றின் மொத்தப்பெறுமதியின் இழப்பு 1824.678 மில் ரூபாவாகும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

தூரக்கரை ஆழ்கடல் மீன்பிடி பாதிப்படைந்தமையும், பெரும்பாலான மீனவர்கள் இடம்பெயர்ந்தமையாலும் மீன் உற்பத்தி சடுதியாக வீழ்ச்சியடைந்தது. 1983இல் அதிஉச்ச உற்பத்தி 49721 தொன்னாகவிருந்து, 1984இல் 23157 தொன்னாகவும், 1987இல் 1981 தொன்னாகவும் வீழ்ச்சிகண்டது. 1991இல் இது 1191 தொன்னாகவும், 1998இல் 2420 தொன்னாகவும் அமைந்திருந்தது. (அட்டவணை-2) 1984முதல் 1997 வரை கிட்டத்தட்ட 549375.2 தொன்வரையில் மீன் உற்பத்தி வீழ்ச்சி கண்டிருப்பதாகவும், இழந்த இதன் மொத்தப் பெறுமதி அண்ணளவாக 55,000 மில் ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

தூரம் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதனாலும், சில குறிப்பிட்ட பகுதிகள் மட்டும் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதனாலும் இன்று மீன்பிடியில் ஈடுபடுவோர் குறிப்பிட்ட பகுதிகளுக்குள்ளேயே தமது வலைகளைப் பயன்படுத்தவேண்டியுள்ளது. இதனால் தொழில் அலகுகளின் எண்ணிக்கை அதிகரித்து மீன்பிடித்தலுக்கான இயல்பான சூழ்நிலை குழம்பிவிடுகின்றது. உதாரணமாக யாழ் ஏரிப்பகுதியில் சிறகு வலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்மையினாலும், சிறகுவலை பயன்படுத்தும் பகுதிகளுக்குள்ளேயே முப்புரிவலைகள் (டிஸ்கோவலை) மற்றும் இழுவை மடிகள், சுற்றிவளைக்கும் வலைகள், தூண்டில்கள் போன்றவற்றையும் பயன்படுத்துவதினாலும் மீனவர்களிடையே

அட்டவணை இல 2

## மீன்உற்பத்திப்போக்கு - யாழ் மாவட்டம் 1980 - 1998 மெ.தொன்னில்

| வருடம் | கிடைத்த உற்பத்தி | கிடைக்க வேண்டிய உற்பத்தி 1983 தொடக்கம் 1% அதிகரிப்பு | இழப்பு அளவு |
|---|---|---|---|
| 1980 | 40018 | - | - |
| 1981 | 43798 | - | - |
| 1982 | 42677 | - | - |
| 1983 | 49721 | - | - |
| 1984 | 23157 | 50715 | 18142 |
| 1985 | 23775 | 51729 | 27954 |
| 1986 | 13053 | 52764 | 39711 |
| 1987 | 11981 | 53819 | 41838 |
| 1988 | 24702 | 54896 | 30194 |
| 1989 | 25075 | 55993 | 30918 |
| 1990 | 21369 | 57113 | 35744 |
| 1991 | 1191 | 58256 | 57065 |
| 1992 | 1327 | 59421 | 58094 |
| 1993 | 1514 | 60609 | 59895 |
| 1994 | 3112 | 61821 | 58709 |
| 1995 | 2263 | 63058 | 60795 |
| 1996 | 1540 | 64319 | 62779 |
| 1997 | 2762 | 65605 | 62843 |
| 1998 | 2420 | 66917 | 64497 |

மூலம்:- மா.க.வி.அலுவலகம், யாழ்ப்பாணம்.

கசப்புணர்வு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டாகின்றன சிலர் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பொருத்தமற்ற, தவறான மீன்பிடிமுறைகளை மேற்கொள்ளவும் காரணமாக அமைந்துவிடுகின்றன. இவை வளச்சுரண்டலுக்குக் காரணமாகவும் அமைகின்றன.

மேலும் இரவுநேரத்தடை காரணமாக பகலில் மீன்பிடியில் ஈடுபடவேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. இரவுநேரமே மீன்பிடித் தொழிலுக்கு வாய்ப்பான நேரமாகும். அதிலும் குறிப்பாக இறால் உற்பத்திக்கு இருட்டு நேரமே மிகப் பொருந்தமானதாகும். இவற்றைவிட ஏரிப்பகுதிகளில் வற்றுப்பெருக்கு ஓட்டத்தை மையமாக வைத்து சிறகுவலை மீன்பிடியில் ஈடுபடுவோர் இரவு நேரத்தடை காரணமாக பருவம் தப்பிய மீன்பிடியில் ஈடுபடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகின்றனர். இதனால் இயல்பான உற்பத்தி பெரிதும் பாதிப்படைகின்றன.

வடமராட்சி, வடக்கு - கிழக்கு கரையோரங்களில் கட்டுமரங்களில் மிக குறைவான எண்ணிக்கை கொண்ட கில்வலைத்துண்டுகளையே கொண்டுசெல்லும் நிலை காணப்படுகின்றது. தூரக்கரையில் இயந்திரப்படகுகளில் 30-40 துண்டு கில் வலைகளைக் கொண்டு மீன்பிடியில் ஈடுபட்டோர் இன்று கட்டுமரத்தில் 5-10 துண்டு வலைகளைக் கொண்டு மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். விடியற்காலையில் 500மீ முதல்-1 கி.மீ தூரம் வரையிலும் உடல் வலுவைப் பயன்படுத்தி தண்டுகள் உதவியுடன் படகினைச் செலுத்தி அவசரஅவசரமாக மீன்பிடியில் ஈடுபட வேண்டியுள்ளது. காலை 6.00 மணிக்கு முன்னர்

கரைதிரும்பவேண்டிய கட்டாயம் இருப்பதினால் மிகுந்த பயத்துடன் தொழிலில் ஈடுபடவேண்டியுள்ளனர். சில சந்தர்ப்பங்களில் திருக்கை பிடிக்கும் கில் வலைகளை முதல் நாள் கடலில் படுத்து, அடுத்தநாள் சென்று எடுக்கவேண்டியும் உள்ளது. சில சந்தர்ப்பங்களில் இவ்வலைகள் நீரோட்டத்தால் அடித்துச் செல்லப்படுவதுமுண்டு.

எனவே மீன்பிடியில் செல்வாக்குச் செலுத்துகின்ற சமுத்திரவியற் காரணிகளைக் கருத்திற்கொள்ளாமல் இராணுவம் தமது பாதுகாப்புகுக் கருதி தாம் நினைத்தவாறு விதித்துள்ள கட்டுப்பாடுகள் மீன்பிடித்தொழிலைப் பொறுத்தவரையில் முற்றிலும் பொருத்தமற்ற ஒன்றாகவேயுள்ளது. எனவே சமுத்திரவியற் காரணிகள் கருத்திற் கொள்ளப்படவேண்டியது அவசியமாகின்றது.

## மீனவர் இடப்பெயர்வுகள்

கரையோரப் பிரதேசமெங்கும் இராணுவம் முகாம்கள் அமைத்தும், தொடர் காவலரண்களை ஏற்படுத்தியும் உள்ளமையினால் சில கரையோரங்களில் இருந்து மீனவர்கள் முற்றாக வெளியேறியுள்ளனர். குறிப்பாக வலிகாமம் வடகரையோரம், ஆனையிறவு ஏரிக்குக் கிழக்கு, மற்றும் மேற்கு ஏரிப்பகுதி, வெற்றிலைக்கேணி, தீவகப்பகுதிகள் என்பவற்றிலிருந்து மீனவர் பெரும்பாலும் இடம்பெயர்ந்துவிட்டனர். 1989ஆம் ஆண்டு கணிப்பீட்டின்படி 22568 குடும்பங்களும் 102808 மீனவர்களும் யாழ் குடாநாட்டில் காணப்பட்டனர். நேரடியாக மீன்பிடியில் ஈடுபட்டோர் தொகை 26009 ஆகும். 1995இன் பின்னர் இராணுவம் யாழ் குடாநாட்டினை ஆக்கிரமித்த

அட்டவணை இல 3

### மீன்பிடி பரிசோதகர் பிரிவு அடிப்படையில் மீனவர் விபரம் 1985 - 1999

| மீன்பிடி பரிசோதகர் பிரிவு | மொத்த குடும்பம் | | நேரடி ஈடுபாடு | |
|---|---|---|---|---|
| | 1995 | 1999 | 1995 | 1999 |
| யாழ்ப்பாணம் மேற்கு | 2670 | 1930 | 4050 | 2100 |
| யாழ்ப்பாணம் கிழக்கு | 1051 | 426 | 1317 | 435 |
| பருத்தித்துறை மேற்கு | 2000 | 1100 | 2750 | 1200 |
| பருத்தித்துறை கிழக்கு | 1140 | 1143 | 1384 | 1548 |
| தாளையடி | 1157 | 423 | 1424 | 434 |
| காங்கேசன்துறை கிழக்கு | 1391 | 657 | 1620 | 646 |
| காங்கேசன்துறை மேற்கு | 535 | 118 | 356 | 110 |
| சண்டிலிப்பாய் | 1576 | 870 | 2946 | 890 |
| சுழிபுரம் | 3046 | 1624 | 3508 | 1542 |
| ஊர்காவற்றுறை | 1361 | 843 | - | 856 |
| நெடுந்தீவு | 425 | 287 | - | 300 |
| வேலணை | 1069 | 559 | 1340 | 605 |
| சாவகச்சேரி | 591 | 418 | 900 | 526 |
| மொத்தம் | 17751 | 10698 | 22289 | 11192 |

மூலம்:- மா.க.வி.அலுவலகம், யாழ்ப்பாணம், 1999.

பின்னர் ஆக 10698 குடும்பங்களும் மொத்த மீனவர்கள் 47734 பேராகவும் நேரடியாக ஈடுபட்டோர் தொகை 11192 ஆகவும் குறைந்துவிட்டதாக மதிப்பிடப்பட்டள்ளது. மீன்பிடி பரிசோதகர் பிரிவு அடிப்படையில் 1995 இன் முன்பும் அவ்வாண்டின் பின்பும் மீனவர் விபரம் அட்டவணை 3இல் தரப்பட்டுள்ளது. அட்டவணையின் பிரகாரம் காங்கேனசன்துறை மேற்கு மீன்பிடிபரிசோதகர் பிரிவில் 23 சதவீதத்தினரும் தாளையடி மீன்பிடி பரிசோதகர் பிரதேசத்தில் 40 ச.வீதத்தினரும் வேலணை மீன்பிடி பரிசோதகர் பிரிவில் 50 சதவீதத்தினருமே திரும்பியுள்ளனர். பொதுவாக 50 சதவீதமானோர் சொந்த இருப்பிடம் திரும்பவில்லை. அவர்கள் வன்னியிலும், தமிழ் நாட்டிலும் அகதிகளாகவே வாழ்ந்து வருகின்றனர்.

## உயிரிழப்புக்கள்

கடல்வலயத்தடை காரணமாக வடபகுதி கரையோர மீனவர்கள் எதிர்கொண்ட மிக மோசமான விளைவு உயிரிழப்புக்கள் ஆகும். கடலில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டோர் மட்டுமல்ல கரையோரங்களில் வாழ்ந்த மக்களும், கடலில் பயணம் செய்த சாதாரண பொதுமக்களும் உயிரிழப்பினைச் சந்தித்துள்ளனர். வடபகுதி மீனவர்கள் மட்டுமல்ல தமிழ்நாட்டு மீனவர்களும் இத்தகைய உயிரிழப்புக்களைச் சந்தித்ததுடன் இன்னும் சந்தித்து வருகின்றனர். அத்துடன் பலர் படுகாயமடைந்தும், கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைத்து வைக்கப்பட்டும் சித்திரவதை செய்யப்பட்டும் உள்ளனர். இன்னும் பலர் காணாமல் போயும் உள்ளனர். மிகமோசமான படுகொலைகளில் 15-05-1985 அன்று வடபகுதிக்கடலில் நடைபெற்ற குமுதினி படகு கோரப்படுகொலையும், 10-06-1986இல் மண்டைதீவுக்கடலில் கொல்லப்பட்ட 31 குருநகர் மீனவப்படுகொலைகளும், 1990 இன் பின்னர் நடைபெற்ற கிளாலிப்படுகொலைகளும் எவராலும் மறக்கமுடியாத சம்பவங்களாகும்.

1990-1994ம் ஆண்டு வரையில் வடபகுதியைச் சேர்ந்த 266 மீனவர்கள் கொல்லப்பட்டும், 14 பேர் கைதுசெய்யப்பட்டும், 81 பேர் காணாமலும் போயுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் பின்னர் இன்றுவரையும் வடபகுதிக் கடலில் துயரச் சம்பவங்கள் தொடர்ந்தவண்ணமேயுள்ளன. 1999 ஆகஸ்ட் முதல் வாரத்தில் குருநகரில் நடைபெற்ற இரண்டு மீனவர் படுகொலைகள் இன்னும் கொலைகள் தொடரும் என்பதையே காட்டுகின்றது.

தமிழ்நாட்டு அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்களின் பிரகாரம் 1983 தொடக்கம் 1991 ஆகஸ்ட வரையிலும் 236 தடவைகள் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாகவும் 486 மீனவர்கள் பாதிக்கப்பட்டதாகவும், 135 மீனவர்கள் படுகாயங்களுக்குள்ளாகியதாகவும, 50 க்கும் மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. 1993 இல் மட்டும் 42 மீனவர்களும், 1994இல் 08 மீனவர்களும் கொல்லப்பட்டதாக அறிக்கைகள் கூறுகின்றன.

இவற்றைவிட இராணுவ முகாம்களில் இருந்து ஏவும் ஏவுகணைகள் கரையோரங்களில் வீழ்ந்து உடமைகளுக்கும், உயிருக்கும் சேதம் விளைவிக்கும் சம்பவங்களும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. மீன்பிடிக் குடியிருப்புக்களில் பெரும்பாலான வீடுகள் கடுஞ்சேதமடைந்த வையாகவே காணப்படுகின்றன. இவர்கள் இழந்த சகல உடமைகளுக்கும் இதுவரை எவ்வித இழப்பீடுகள் வழங்கப்பட்டதாகத் தகவல் இல்லை.

இன்று குடாநாட்டில் கரையோரப் பகுதிகளில் வாழ்கின்ற மீனவ குடும்பங்கள் அரைகுறை உலர்உணவு நிவாரணத்தை நம்பியே வாழ்கின்றனர். இவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற உலர் உணவானது அவர்களது வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்குப் போதாது. மேலும் கல்வி, சுகாதாரம், உடைகள் போன்ற தேவைகளுக்கும் அத்தியாவசியத் தேவைகளான விறகு, போன்ற மற்றும் தேவைகளுக்கும் பணவசதி அவசியமானதாகும். சராசரி 5 அங்கத்தினர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு அடிப்படை வசதிகளைத் தீர்க்க மாதம் 5000 ரூபா முதல் 7000 ரூபா வரையில் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மீன்பிடியில் ஈடுபடும் பெரும்பாலான மீனவர்களுக்கு இத்தகைய வருமானம் நிச்சயமாகக் கிடைப்பதில்லை. இதனால் இவர்களது வாழ்க்கைத்தரம் மேலும் சீரழிந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

பலர் உயிர்களை இழந்து, உடமைகளை இழந்து அடிமைகளாக சொல்லொண்ணாத் துயரங்களின் மத்தியில் வாழும் இம் மீனவர்களின் பிரச்சினைகளை எடுத்துச்சொல்லவும் தட்டிக்கேட்கவும் இங்குள்ள தமிழ் அரசியல்

வாதிகள் முதல் அதிகாரிகள் வரையில் உருப்படியான எதையும் இதுவரையில் செய்யவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

## உடனடித் தீர்வுகள்:

- ✔ நேரத்திலும், தூரத்திலும் உள்ள கட்டுப்பாடுகள் - ஓரளவிலேனும் தளர்த்தப்படல் வேண்டும்.
- ✔ பகல் வேளைகளில் சுழியோடிப்பிடித்தல் முறை அனுமதிக்கப்படல் வேண்டும்.
- ✔ குறைந்த குதிரை வலுக்கொண்ட வெளியிணை இயந்திரங்களையும், இயந்திரப் படகுகளையும் தொழிலில் பயன் படுத்த அனுமதித்தல் வேண்டும்.
- ✔ உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த, போக்குவரத்துவசதிகள் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.
- ✔ தொடர்ந்தும் நிவாரணம் வழங்கப்படல் வேண்டும்.
- ✔ தேவையான மீன்பிடி உபகரணங்களை தடையின்றிப் பெற்றுக்கொள்ள ஆவன செய்யப்படவேண்டும்.
- ✔ இழப்பீடுகளுக்கு நியாயமான நஷ்டஈடு வழங்கப்படல் வேண்டும்.
- ✔ 'பாஸ்' நடைமுறைகளிலுள்ள கெடுபிடிகள் தளர்த்தப்படல் வேண்டும்.

## உசாத்துணை


1. ஆனந்தன், ஏ.எஸ். (1995) கச்சதீவு - அன்றும் இன்றும் நடமாடும், துவிச்சக்கரவண்டி மீன் வணிகர்மன்றம்., யாழ்ப்பாணம்.
2. சூசை ஏ.எஸ் (1993) இலங்கை மீன்பிடித்துறையின் இன்றைய நிலை. ஒரு நோக்கு, சிந்தனை V.III 79-85 யாழ். பல்கலைக்கழகம்.
3. Council of NGOO, Jaffna District. (1998)
   Reciew of Resettlemen and Rehabilitation programme. Jaffna Peninsula, May 1996 June 1998.
4. Department of Fisheries (1999): Administeration Report, DFEO office. Jaffna.
5. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி
   இல. 376/11 நவம்பர் 18, 1985.